# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 304/மா/2023**
**நாள்: 26.10.2023**

திரு. கே. ஜோதிலிங்கம்,
சென்னை. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம் - 15, பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, மேட்டுக்குப்பம், இந்திரா காந்தி தெரு, எண்.3/358 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. கே. ஜோதிலிங்கம் என்பவரின் 12.09.2023 நாளிட்ட மனு 20.09.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 304/மா/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

பெருநகர சென்னை மாநகராட்சி, மேட்டுக்குப்பம், இந்திரா காந்தி தெரு, எண்.3/358 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. கே. ஜோதிலிங்கம் என்பவரின் 12.09.2023 நாளிட்ட மனுவில்:-

I have made an online Complaint vide No.2023-363 FJJ dated 22.5.2023 regarding "Nandavanam Veg-Restaurant opened one year ago on the ground floor at 10A, Rajiv Gandhi Salai, Annai Parvathy Nagar, Mettukuppam, Thoraipakkam, Chennai – 600 097 it comes under Ward No.194, Zone XV, GCC. Recently the Nandavanam Veg-Restaurant opened A/c Hall on the first floor at above said address. So many peoples come there and park their vehicles on the service road itself and standing food tables have been placed on the pedestrian way, which causes inconvenience to the public and also due to metro work service-road is access as a main road that makes very inconvenience to the public. The said restaurant building did not have a parking facility and did not have any emergency exit and the said restaurant building seems illegal and authorized construction. I request you to take necessary legal action according to the law. I herewith attached a photocopy for your reference."

But no action has been taken on my complaint, instead the AE Division 195, AEE2 Zone 15, EEI Zone 15, and Zonal Officer Zone 15 are constantly escalating/forwarding with each other.

On 20.08.2023, I stated that "Even though my complaint has been registered for 90 days now, the zonal officer forwarded it to AE and AE forwarded it to the Zonal Officer, but you are still forwarding it to each other instead of taking action. In addition, I informing you that yesterday I saw that standing food tables have been placed on the pedestrian way only. Also, if you do not take any action, I will file my complaint before an Ombudsman."

Also, after that, the same escalation and forwarding took place only between the Zonal Officer, Zone 15 and the AE Division 195 instead of taking action against them which seems that they are in collusion with them.

Therefore, I request you to direct them to take necessary action on my complaint.

Further, I request you take appropriate action against the AE Division 195, AEE2 Zone 15, EE1 Zone 15 and Zonal Officer Zone 15 for denying their duty and failing to take action on my complaint within the specified time frame.

**மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு 13.10.2023 நாளிட்ட இம்முறைமன்ற கடிதத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது. அவர் தனது 17.10.2023 நாளிட்ட அறிக்கையில்**:

"மனுதாரர் தன்னுடைய மனுவில் குறிப்பிட்டுள்ள, 10A ராஜீவ்காந்தி சாலை (OMR Salai) தமிழ்நாடு சாலைகள் மேம்பாட்டு நிறுவனம் (TNRDC) மூலம் உருவாக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகிறது என்றும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான சாலை அல்ல என்றும் பராமரிக்கவும் இல்லை என்றும், மனுதாரர் குறிப்பிடப்பட்டபடி பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அளிக்கப்பட்ட புகாரில், சாலைகளில் வாகனங்கள் நிறுத்தி வைத்துள்ளதாகவும், போக்குவரத்திற்கும், பாதசாரிகளுக்கும் இடையூறு உள்ளதாகவும் புகார் அளித்துள்ளார் எனவும் OMR சாலையானது TNRDC என்ற நிறுவனத்திற்கு சொந்தமானதால், TNRDC என்ற நிறுவனமே ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும் என்பதால் OMR சாலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற இதற்கு முன்பே 07.02.2023 மற்றும் 08.03.2023 ஆகிய தேதிகளில் பெருநகர சென்னை மாநகராட்சியானது TNRDC நிறுவனத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்றும் மேலும் இது குறித்து தொடர்ந்து வலியுறுத்தப்பட்டும் வருகிறது என்றும் நந்தவனம் வெஜ் ரெஸ்டாரண்ட் ஹோட்டலுக்கு வரும் வாகனங்களை சாலைகளில் நிறுத்த வேண்டாம் எனவும் மீறினால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரித்த பிறகு தற்போது வாகனங்கள் நிறுத்தும் இடம் தனியே அமைக்கப்பட்டுள்ளது என்றும் இது குறித்து மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டு மனுதாரரும் உறுதி செய்துள்ளார் என்றும் மேலும் மனுதாரர் புகாரினை 16.10.2022 அன்று வாபஸ் பெற்றுள்ளார் என்று தெரிவித்துள்ளார்."

**2. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் 18.10.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 13.10.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**மனுதாரர் வர இயலாத காரணத்தினால் திரு. கு. கார்த்திக் என்பவர் 18.10.2023 அன்று இம்முறைமன்றத்தில் ஆஜராகி மனுதாரரின் பின்வரும் எழுத்துமூல விவரங்களை இம்முறைமன்றத்தில் சமர்ப்பித்தார். மனுதாரர் அதில்**

"சென்னை பெருநகர மாநகராட்சி, மண்டலம்–15, ராஜீவ்காந்தி சர்வீஸ் சாலையில் இயங்கி வரும் வெஜ் ரெஸ்டாரெண்ட்டுக்கு வரும் வாகனங்கள் சாலையில் நிறுத்தப்பட்டு, போக்குவரத்திற்கு இடைஞ்சலாக உள்ளதாக தெரிவித்து மேற்கண்ட மனுதாரர் திரு. ஜோதிலிங்கம் மாநகராட்சியில் புகார் மனு அளித்ததைத் தொடர்ந்து மேற்கண்ட ரெஸ்டாரெண்ட்டுக்கு வரும் வாகனங்கள் OMR சர்வீஸ் சாலையில் தற்போது நிறுத்தப்படுவதில்லை என்பதால், மனுதாரர் இம்முறை மன்றத்தில் அளித்திருந்த தனது 12.9.2023 நாளிட்ட மனுவை திரும்பப்பெற்றுக்கொள்வதாகத் தெரிவித்து அளித்துள்ள 17.10.2023 நாளிட்ட கடிதத்தை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-15ன் உதவிப் பொறியாளர் 18.10.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு பதிவு செய்துள்ளார்.**

மனுதாரர் குறிப்பிட்டுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-15, கோட்டம்–195, ராஜீவ்காந்தி சர்வீஸ் சாலையில் இயங்கிவரும் வெஜ் ரெஸ்டாரெண்டுக்கு வரும் வாடிக்கையாளர்களின் வாகனங்கள் மேற்கண்ட சர்வீஸ் சாலையிலேயே நிறுத்தப்பட்டு போக்குவரத்திற்கு இடைஞ்சல் ஏற்படுகிறது என புகார் மனு பெறப்பட்டது. மேற்கண்ட OMR சாலையில் ஏற்படும் போக்குவரத்து நெரிசல் குறித்து TNRDC நிறுவனத்திற்கு 7.2.2023 மற்றும் 8.3.2023 ஆகிய நாட்களில் கடிதம் அனுப்பப்பட்டதைத் தொடர்ந்தும் மேலும் மேற்கண்ட வெஜ் ரெஸ்டாரெண்டுக்கு வரும் வாகனங்களை சாலைகளில் நிறுத்த வேண்டாம் எனவும் மீறினால் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரிக்கை விடுத்தப் பின்னர் அங்கு தற்போது வாகனங்கள் நிறுத்தப்படுவதில்லை என இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இம்முறை மன்றத்தில் என்னால் சமர்ப்பிக்கப்படும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல அலுவலர்–15 அவர்களின் 17.10.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

**3. முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் – 15ன் உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் மற்றும் அறிக்கை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் அறிய முடிகிறது.**

மனுதாரர் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–15 துரைபாக்கம், மேட்டுக்குப்பம், பார்வதி நகர் 10எ இராஜீவ்காந்தி சாலையில் இயங்கி வரும் நந்தவனம் வெஜ் ரெஸ்டாண்ட்டுக்கு வரும் வாகனங்கள் நிறுத்த போதிய இடவசதி இல்லாததால் வாகனங்கள் சர்வீஸ் சாலையில் நிறுத்தப்படுவதாகவும், அதனால் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுவதாகவும் மேலும், அக்கட்டடம் அனுமதியில்லாமல் கட்டப்பட்டு இருப்பதாக தெரிவதாகவும், இது குறித்து பெருநகர

சென்னை மாநகராட்சிக்கு மனு கொடுத்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று தெரிவித்து தன் மனு மீது உரிய நடவடிக்கையும், நடவடிக்கை எடுக்காத பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–15ன் அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கையும் எடுக்குமாறு கோரியுள்ளார்.

மேற்கண்ட OMR சாலை TNRDC நிறுவனத்திற்கு சொந்தமானதால், அச்சாலையில் இயங்கி வரும் நந்தவனம் வெஜ் ரெஸ்டாண்ட்டுக்கு வரும் வாகனங்கள் அச்சாலையை ஆக்கிரமித்து நிறுத்துவதால் எற்படும் நெரிசல் குறித்து TNRDC நிறுவனத்திற்கு 7.2.2023 மற்றும் 8.3.2023 ஆகிய நாட்களில் கடிதம் அனுப்பப்பட்டதைத் தொடர்ந்து மேற்கண்ட நந்தவனம் வெஜ் ரெஸ்டாண்ட்டுக்கு வரும் வாகனங்களை சாலைகளில் நிறுத்த வேண்டாம் எனவும், மீறினால் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கை விடுத்தப் பின்னர் அங்கு தற்போது வாகனங்கள் நிறுத்தப்படுவதில்லை என்பதும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-15ன் மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் உதவிப்பொறியாளரின் வாக்குமூலத்திலிருந்து அறியமுடிகிறது. மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-15ன் மண்டல அலுவலர் தன்னுடைய அறிக்கையில் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டு மனுதாரரும் அதனை உறுதி செய்துள்ளார் எனவும், மனுதாரர் புகாரினை 16.10.2023 அன்று வாபஸ் பெற்றுள்ளார் என்றும் தெரிவித்துள்ளார்."

மனுதாரர் 12.09.2023 அன்று இம்முறைமன்றத்திற்கு மனு அளித்தது தொடர்பாக, 18.10.2023 அன்று நடைபெறும் நேரடி விசாரணையில் ஆஜராக கோரி அழைப்பாணை அனுப்பப்பட்டது ஆனால் மனுதாரர் 17.10.2023 நாளிட்ட கடிதத்தில் "கடந்த 12.09.2023 அன்று தங்கள் நடுவத்தில் அளிக்கப்பட்ட மனு தொடர்பாக 304/மா/2023 எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டு மேற்படி முறையீட்டு மனு மீது 18.10.2023 பிற்பகல் 1.00 மணியளவில் விசாரணைக்கு ஆஜராகும்படி அழைப்பாணை அனுப்பப்பட்டது என்றும் 18.10.2023 அன்றைய தினத்தில் என் சகோதரி திருமணம் உள்ளதால் என்னால் நேரில் வர இயலாத நிலையில் நேரில் வராதமைக்கு வருத்தம் தெரிவிக்கிறேன் என்றும் நான் கொடுத்த புகார் மனு தொடர்பான எதிர்மனுதாரர் புகார் தொடர்பான விவரங்களை நிவர்த்தி செய்ததால் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன் என்றும் ஆகவே, நான் கொடுத்த புகார் மனு மீது மேல் நடவடிக்கை தேவையில்லை என்பதை இந்த கடிதம் மூலம் தெரிவிக்கிறேன் என்றும் மேற்படி தகவலை என் சார்பாக இந்த கடிதம் கொண்டு வரும் திரு. K. கார்த்திக் த/பெ. குமரேசன் அவர்களிடம் கொடுத்து அனுப்புகிறேன் என்றும் ஆகவே ஐயா அவர்கள் தயவு கூர்ந்து மேற்படி கடிதத்தை மிகவும் பணிவுடன் அனுமதிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

4. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 15ன் அலுவலகத்திற்கு மனுதாரர் 16.10.2023 அன்று தனது புகாரினை வாபஸ் பெறுவதாக அதாவது விசாரணைக்கு இரண்டு நாட்களுக்கு முன்பு தெரிவித்து இருப்பது சந்தேகத்திற்கு இடமளிப்பதாக இம்முறைமன்ற கருதியதால், மனுதாரர் சார்பாக அவரது உதவியாளர் திரு. கார்த்திக் என்பவர் அளித்த மேற்கண்ட கடிதம் இம்முறைமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

5. எனவே, இம்முறை மன்றத்தின் மாண்பை குறைக்கும் விதமாகவும், உள்நோக்கத்துடனும் நடந்துகொண்ட மனுதாரர் திரு. கே. ஜோதிலிங்கம் அவர்களால் இம்முறைமன்றத்திற்கு அளிக்கப்படும் புகார் மனுக்கள் ஆறு மாதத்திற்கு ஏற்கப்படாது என்று முடிவு செய்து இம்முறைமன்றம் அவ்வாறே ஆணையிடுகிறது.

6. மேலும் OMR சாலையில் உள்ள இதர உணவகங்களில் நிறுத்தப்படும் வாகனங்களால் ஏற்படும் நெரிசலை முடிவுக்கு கொண்டு வர, TNRDC நிறுவனத்துடன் இணைந்து உரிய

தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–15ன் மண்டல அலுவருக்கு இம்முறைமன்றம் அறிவுரை வழங்கி ஆணையிடுகிறது

7. 2023–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 26–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. கே. ஜோதிலிங்கம்,
எண்.3/358, இந்திரா காந்தி தெரு,
மேட்டுக்குப்பம், சென்னை – 600 097.

2) அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையாளர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

3) மண்டல அலுவலர்,
மண்டலம்-15, பெருநகர சென்னை மாநகராட்சி,
120, இராஜீவ் காந்தி சாலை (OMR),
சோழிங்கநல்லூர், சென்னை – 600 119.

4) கண்காணிப்பு பொறியாளர்,
மழைநீர் வடிகால்துறை,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்